மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : கேள்வியில் கடைசிப் பகுதிக்குப் பதில் அளிப்பதாக இல்லை. முன்னாலே சொல்லப்பட்டவைகளுக்கெல்லாம் ஏற்கெனவே பதில் அளிக்கப்பட்டது. கனம் உறுப்பினர் அவர்கள் நேரம் கழித்து வந்தார்கள் என்று கருதுகிறேன்.

திரு. மு. ச. சிவசாமி : முந்தைய அரசாங்கத்தின் தாய்மொழிப் பற்றற்ற காரணத்தால்தான் இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் தமிழக அரசுக்கு நஷ்டமும் அதை விட விலைமதிக்க முடியாத பல உயிர்களின் நஷ்டமும் ஏற்பட்டது என்பதை இந்தச் சர்க்கார் அறியுமா ?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : கனம் உறுப்பினரைப் போல் கருதுகிறவர்கள் தமிழகத்தில் பலர் இருக்கிறார்கள்.

ஹாஜி ம. மு. பீர் முஹம்மது : ஐயா, தாய் மொழியைக் காப்பாற்றுவதற்காக தவச் செல்வங்களான மாணவமணிகள் தங்களுடைய இன்னுயிரை நீத்திருக்கிறார்கள். இந்த வீரத் தியாகிகளுக்கு நிரந்தரமான நினைவுச் சின்னத்தை நமது அரசாங்கம் ஏற்படுத்துமா ?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : அவர்களுக்கு நிரந்தரமான நினைவுச் சின்னம் நம்முடைய இதயத்தில் அவர்களுக்கு மதிப்பான இடத்தை அளிப்பதுதான்.

THIRU K. VINAYAKAM : Apart from throwing the blame on the previous Government who exactly is responsible for this Anti-Hindi Agitation and is it a fact that, when a lot of destruction occurred in cur State, this was referred to the Hon. Chief Minister who was then the Leader of the party and the Leader said that his party was not responsible and some hooligans, some rowdies, some unsocial elements were responsible for this looting ?

THE HON. THIRU C. N. ANNADURAI : I do not know whether this supplementary question is appropriate to the main question. As a matter of fact, if the Hon. Member wants to know about myself, I was not outside, I was inside the jail at that time.

அமைச்சர்கள் சுற்றுப் பயணம்

273 வினா.—திரு. என். கிட்டப்பா : மதிப்பிற்குரிய முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா :—

(அ) மந்திரிகள் சுற்றுப் பிரயாணம் செய்யும் காலங்களில் போலீஸ் பரிவாரங்கள் துணைக்கு வரவேண்டாமென சுற்றிக்கை அனுப்பப்பட்டுள்ளதா ?

(இ) ஆம் எனில், அதற்கான நோக்கம் என்ன ?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : (அ) & (இ) அமைச்சர்கள் சுற்றுப்பயணம் செய்யுங்காலையில், அன்னாரின் பாதுகாப்பின் பொருட்டுச் செய்யப்பட்டுள்ள ஏற்பாடுகள் குறித்த விவரங்களைப்பற்றி விவாதிப்பது பொதுநலனுக்கு ஏற்புடையதல்ல.

Movement of foodgrains.

*278 *Q.*—THIRU K. VINAYAKAM :
THIRU A. M. RAJA :
THIRU S. RAMACHANDRAN: } Will the Hon. the Minister for Food and Revenue be pleased to state the steps taken to prevent the movement of rice and paddy without permit into the neighbouring States like Andhra Pradesh, Mysore and Kerala ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : மாநில எல்லைகளிலுள்ள வெளியேறு வழிகள் (Exit gate) அனைத்தும் மூடப்பட்டுள்ளன. மாவட்டங்களுக்கு இடையேயும், மாநிலங்களுக்கிடையேயும் உள்ள காவல் சாவடிகளில் சோதனை போடுதல் கடுமையாக்கப்பட்டுள்ளது. லஞ்ச ஒழிப்பு